# 8 பொழுது போக்கு

கலைவாணி, கண்ணகி வித்தியாலயத்தில் படிக்கும் மாணவி. ஆயிஷா, டீ.பீ.ஜாயா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி. இருவரும் தமிழ் மொழித்தினப் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விவேகானந்தாக் கல்லூரிக்கு வந்திருந்தனர். நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் காரியாலயத்தில் இருவரும் சந்திக்கின்றனர்.



**கலைவாணி**:- வணக்கம், உங்கள் பெயர் என்ன?

**ஆயிஷா** :- வணக்கம், எனது பெயர் ஆயிஷா. உங்கள் பெயர் என்ன?

**கலைவாணி**:- நான் கலைவாணி - தமிழ் மொழித்தினம் பற்றி நீங்கள் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

**ஆயிஷா** :- நான் பத்திரிகை மூலமும் ஆசிரியர்கள் மூலமும் அறிந்து கொண்டேன்.

**கலைவாணி** :- பத்திரிகையிலும் போட்டிருந்ததா? நான் வானொலி மூலமாகவும் ஆசிரியர்கள் மூலமாகவும் அறிந்தேன். பத்திரிகை வாசித்தல் உங்கள் பொழுதுபோக்கா?

**ஆயிஷா** :- ஆம் பத்திரிகை வாசித்தலும், முத்திரை சேகரித்தலும் தான் எனது பொழுதுபோக்குகள்.

**கலைவாணி** :- ஏன் வானொலி கேட்பது இல்லையா?

**ஆயிஷா** :- கேட்பேன். பத்திரிகை வாசிப்பதினால் நிறைய பயன்கள் இருக்கின்றன.

**கலைவாணி** :- ஆம்! ஆம்! அதனால் அறிவு வளர்வதுடன் இன்றைய நாட்டு நடப்பு, பாடங்கள் தொடர்பான விடயங்கள், ஏன்? சமையல் குறிப்புக்கள் என்று ஏராளமான விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

**ஆயிஷா** :- முத்திரை சேகரித்தலாலும் அதிகமான விடயங்களை அறியலாம்.

**கலைவாணி** :- முத்திரை சேகரித்தல் உங்களின் பொழுது போக்கு என்கிறீர்களே, எந்தெந்த நாடுகளின் முத்திரைகளைச் சேகரித்து இருக்கிறீர்கள்?

**ஆயிஷா** :- நிறைய முத்திரைகளைச் சேகரித்து இருக்கிறேன். குறிப்பாக இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சவுதி அரேபியா, பாகிஸ்தான், எகிப்து போன்ற பல நாடுகளின் முத்திரைகள் என்னிடம் இருக்கின்றன.

**கலைவாணி** :- பத்திரிகை வாசித்தலைப் பற்றிக் கூறுங்களேன்.

**ஆயிஷா** :- எனக்கு தமிழ், சிங்களப் பத்திரிகைகளை வாசிப்பது என்றால் சாப்பாடு கூடத் தேவை இல்லை. ஓய்வு நேரம் போதாது என்றுதான் கூற வேண்டும்.

**கலைவாணி** :- முத்திரை சேகரிப்பது போல் ஓவியங்களைச் சேகரிப்பதும் ஓவியம் வரைவதும், எனக்கு விருப்பமான பொழுதுபோக்குகள்

**ஆயிஷா** :- அப்படியா? அப்போ நீங்கள் அழகாக வரைவீர்களா?

**கலைவாணி** :- ஓரளவு வரைவேன்; சித்திரம் எனது விருப்பமான பாடமும் கூட.

**ஆயிஷா** :- எப்படியான சித்திரங்களை வரைவீர்கள்?

**கலைவாணி** :- காட்சிகள், உருவங்கள் என்பனவற்றை வரைவதுடன் வெவ்வேறு ஓவியங்களையும் வரைகிறேன். அதனால் நல்ல பல பயன்கள் உள்ளன.

**ஆயிஷா** :- எனக்கும் ஓவியம் வரைய ஆசைதான்; ஆனால், வரையத் தெரியாது.

**கலைவாணி** :- ஓவியம் வரைதல் கஷ்டமான காரியமல்ல. முயற்சி செய்து பாருங்கள். நீங்களும் வரையலாம்.

**ஆயிஷா** :- ஒரு வேலையைச் செய்து அலுப்பு வரும்போது வேறு ஒரு வேலையைச் செய்தால் களைப்புத் தீர்வதுடன் மனதுக்கும் புது உற்சாகம் ஏற்படும்.

**கலைவாணி** :- ஆயிஷா! இலாபம் கிடைக்கும் பொழுது போக்குகளும் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியுமா?



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**ஆயிஷா** :- அப்படியா? அவை என்ன?

**கலைவாணி** :- உங்களுக்குத் தெரிந்தவைதான் ஆயிஷா! பூக்கள் செய்தல், கூடை பின்னுதல், பூக்கன்றுகள் நாட்டுதல் என்று பல இருக்கின்றன.

**ஆயிஷா** :- ஆமாம் கலைவாணி எமது பொழுது போக்கைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தினால் பணமும் வரும் புகழும் கிடைக்கும்.

(இந்நேரத்தில் போட்டி நிகழ்ச்சிக்காக இருவரும் அழைக்கப் படுகின்றனர். இருவரும் வணக்கம் சொல்லிவிட்டுப் போட்டி நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றனர்.)

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | படிக்கும் / கற்கும் | - | ඉගෙනගන්නා |
| 2. | தமிழ்மொழித்தினம் | - | දෙමළ භාෂා දිනය |
| 3. | கலந்து கொள்ள | - | සහභාගිවීමට |
| 4 | அறிமுகமாதல் | - | හඳුනාගැනීම |
| 5. | பொழுதுபோக்கு | - | විනෝදාංශය |
| 6. | சேகரித்தல் | - | එකතු කිරීම |
| 7. | ஓய்வுநேரம் | - | විවේක වේලාව |
| 8. | ஓவியம் | - | චිත්‍රය / සිතුවම් |
| 9. | வரைதல் | - | ඇඳීම |
| 10. | இலகுவழி | - | පහසු මාර්ගය |
| 11. | முயற்சி | - | උත්සාහය |
| 12. | களைப்பு | - | වෙහෙස |
| 13. | பாடகன் | - | ගායකයා |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள பொழுது போக்குகள் எவை?
2. இதிலே கூறப்பட்டுள்ள இலாபம் கிடைக்கும் பொழுது போக்குகளைக் குறிப்பிடுக.
3. இப்பாடத்தில் இடம்பெறும் தகவல் தொடர்பு சாதனங்களைக் குறிப்பிடுக.
4. பத்திரிகை வாசித்தலின் பயன்களைத் தருக.
5. களைப்பு எவ்வாறு தீர்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது?

## இலக்கணம்

**இருமொழிக்கும் பொதுவான சில சொற்கள்**
**සිංහල හා දෙමළ භාෂාවේ පොදු වචන**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆரம்பம் | - | ආරම්භය |
| 2 | பத்திரிகை | - | පත්‍ර /පුවත්පත |
| 3. | முத்திரை | - | මුද්දර |
| 4 | பாடம் | - | පාඩම |
| 5. | தினம் | - | දිනය |
| 6. | சித்திரம் | - | චිත්‍ර |
| 7. | ஆசை | - | ආශාව |
| 8. | குடை | - | කුඩය |
| 9. | விசேட | - | විශේෂ |
| 10. | வித்தியாலயம் | - | විද්‍යාලය |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

| **பேச்சு மொழி**<br>**කථිත භාෂාව** | | **எழுத்துமொழி**<br>ලිඛිත **භාෂාව** |
|---|---|---|
| 1. போட்டிருந்ததா? | - | பிரசுரிக்கப்பட்டு இருந்ததா? |
| 2. கேக்கிறது | - | கேட்கின்றது |
| 3. இருக்கு | - | இருக்கின்றது |
| 4. கூறுங்களேன் | - | கூறுங்கள் |
| 5. வரைவீங்களா? | - | வரைவீர்களா? |
| 6. வரைவன் | - | வரைவேன் |
| 7. சொல்லித்தாறன் | - | சொல்லித்தருகிறேன் |

## *செயற்பாடு - I*

**பொருத்தமான சொற்களை இணையுங்கள்**

**සුදුසු වචනය යා කරමු**

1. வேலை
2. பத்திரிகை
3. வானொலி
4. முத்திரை
5. சித்திரம்
6. பாடம்

- சேகரித்தல்
- வரைதல்
- படித்தல்
- வாசித்தல்
- கேட்டல்
- செய்தல்

(1. வேலை → செய்தல்)

## செயற்பாடு - II

**பேச்சு மொழிச் சொற்களை எழுத்து மொழியில் எழுதுவோம்.**
**කථන භාෂා වචන ලිඛිත භාෂා වචනයෙන් ලියමු**

உதாரணம் :-

பேச்சுவழக்கு :- நேத்து இஞ்சை வந்தியா?

எழுத்துவழக்கு :- நேற்று இங்கு வந்தாயா?

i. உங்கட பேர் என்ன?

...........................................................................

ii நீங்க எப்பிடி தெரிந்து கொண்டீங்க?

...........................................................................

iii நான் வானொலி மூலமா அறிஞ்சேன்

...........................................................................

iv பத்திரிகை வாசித்தலைப் பத்திக் கூறுங்க.

...........................................................................

v. அப்போ நீங்க நல்லா வரைவீங்களா?

...........................................................................

**பின்வரும் வழுவான வாக்கியங்களை வழுவற்ற வாக்கியங்களாக மாற்றுவோம். - වැරදි වාක්‍ය නිවැරදි කරන්න**

## செயற்பாடு - III

i. நான் பாடம் படித்தோம்.

...........................................................................

ii. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றது.

...........................................................................

iii. பூனை எலியைப் பிடித்தான்.

...........................................................................

iv. சிறுவன் சுத்தமான நீர் கொண்டு வந்தாள்.

...........................................................................

v. அவன் வீட்டுக் கதவைத் துறந்தான்.

...........................................................................



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - IV

**தமிழ் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்த்து எழுதுவோம்.** **දෙමළ වාක්‍ය සිංහලට පරිවර්තනය කර ලියන්න.**

1. நிறைய முத்திரைகளைச் சேகரிக்கின்றேன்.

   ..........................................................................................

2. பத்திரிகை வாசித்தலைப் பற்றிக் கூறுங்கள்.

   ..........................................................................................

3. ஓய்வு நேரம் போதாது.

   ..........................................................................................

4. ஓவியம் வரைவதும் விருப்பமான பொழுது போக்காகும்.

   ..........................................................................................

5. சித்திரம் எனக்கு விருப்பமான பாடமாகும்.

   ..........................................................................................

## வாழ்த்துகள்

### தமிழில் வாழ்த்துக்கள் தெரிவிக்கும் முறை

- ✡ இனிய பொங்கல் வாழ்த்துகள்
- ✡ இனிய புதுவருட வாழ்த்துகள்
- ✡ இனிய ரம்ழான் வாழ்த்துகள்
- ✡ இனிய நத்தார் வாழ்த்துகள்
- ✡ இனிய பொசன் வாழ்த்துகள்
- ✡ இனிய வெசாக் வாழ்த்துகள்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்றவருக்குப் பின்வருமாறு வாழ்த்துக் கடிதம் எழுதலாம்.**

96/ 2, பிரதான வீதி,
கொழும்பு - 06.
2010.03.12.

அன்புள்ள நண்பா,

வணக்கம். உனது கடிதம் கிடைத்தது. இங்கு என் அம்மா, அப்பா, தங்கை அனைவரும் மிக்க நலம். அங்கு உன் குடும்பத்தினர் அனைவரும் நலமாய் வாழக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 3 பாவோதல் போட்டியில் உனக்கு முதலாம் இடம் கிடைத்தமையை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். அதற்காக உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
உனது அன்பு நண்பன்.
குமார்.

## செயற்பாடு - V

- பரீட்சையில் மிகச் சிறப்பாகச் சித்தியடைந்த உமது நண்பனைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக